செ.வெ.எண்-12 நாள்-08.01.2021

# அரியலூர் மாவட்டம்
# கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான ஒத்திகை சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் குமிழியம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான ஒத்திகை சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (08.01.2021) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோயின் தீவரத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், கொரோனா தடுப்பூசியினை பொது மக்களுக்கு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான ஒத்திகை சிறப்பு முகாம்இன்று அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, உடையார்பாளையம் அரசு மருத்துவமனை, அரியலூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், குமிழியம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரியலூர் ஏ.எஸ்.தனியார் மருத்துவமனை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

மேற்காணும் கொரேனா தடுப்பூசி ஒத்திகை சிறப்பு முகாமில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட முன்களப்பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்குவது தொடர்பான ஒத்திகை நடைபெற்றது.

இம்முகாமில், தடுப்பூசி அளிக்க தேர்வு செய்யப்பட்டவர்களின் உடல்நிலை பரிசோதனை செய்யப்பட்டு, அனைவரும் தனிமனித இடைவெளியுடன் காத்திருப்பு அறையில் அமர வைக்கப்பட்டனர். மேலும், தடுப்பூசி போட வந்தவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்ட இணையதளத்தில் உள்ள விவரங்களுடன் சரிபார்க்கப்பட்டனர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஒத்திகை நடத்தப்பட்டு, உடனே இந்த விவரம் அவர்களின் மொபைல் எண்ணுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பிவைக்கப்படும். தடுப்பூசி அளித்த பிறகு ஏதேனும் பாதிப்பு வருகிறதா எனக்கண்டறிய தனியாக 30 நிமிடங்கள் அமர வைக்கப்பட்டு ஒத்திகை நடத்தப்பட்டது.

மேலும், தடுப்பூசியால் பாதிப்புகள் ஏற்படுகிறதா என்று கண்காணிக்கப்பட்டு, பாதிப்புகள் ஏற்படின் உடனடியாக அவர்களை சிகிச்சைக்கு அழைத்து செல்வதற்காக 108 ஆம்புலன்ஸ் வசதிகள் ஏற்பாடு செய்யபட்டிருந்தன. மேற்காணும் ஒத்திகை முகாமினை தொடர்ந்து, அடுத்தடுத்த கட்டங்களாக அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜா, வட்டார மருத்துவ அலுவலர் ரேவதி, உதவித்திட்ட மேலாளர் சதீஸ் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**